## 4.6 மாவட்ட மற்றும் வட்டார அளவில் மட்டும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்கு தொடங்குதல் மற்றும் பராமரித்தல்

---

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மா.அ.தி–2) துறை

அரசாணை (நிலை) எண்.47 நாள்: 23.3.2007

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண். 115, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.9.2006
2. அரசு ஆணை நிலை எண். 189, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 27.12.2006
3. அரசு கடித எண். 7440/மாஅதி2/2007–1, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 6.3.2007

**ஆணை**

படிக்கப்பட்ட ஒன்றில் காணும் அரசாணையின் பத்தி –12 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக, பத்தி–12 கீழ்கண்டவாறு மாற்றி ஆணையிடப்படுகிறது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரும், வட்டார அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) களும் தனியே வங்கிக் கணக்குகள் தொடங்க வேண்டும். கிராம ஊராட்சிகளில் இதற்கென வங்கிக் கணக்குகள் எதுவும் துவக்கத் தேவையில்லை. இத்திட்டத்திற்கான நூலகங்கள் மற்றும் விளையாட்டுப் பகுதிகளுக்கான தொகையை மாவட்ட அளவில் வைத்துக் கொள்ள வேண்டும். எஞ்சியப் பகுதிகளுக்கான நிதியை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) களுக்கு விடுவிக்க வேண்டும். ஒரு ஊராட்சிக்கான நிதி வேறாரு ஊராட்சிக்கான நிதியுடன் கலந்திடாமல் தடுப்பதற்காக வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) இதற்கென பேரேடு ஒன்றை பராமரிக்க வேண்டும்.

அப்பேரேட்டில் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தனித்தனி பக்கங்கள் ஒதுக்கி அவற்றில் இத்திட்டம் குறித்த வரவு மற்றும் செலவு விவரங்களை பதிவு செய்து பேண வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்